# ஆத்மஜோதி



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

தை—மாசி 1976

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாதவெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.
— சுத்தானந்தர்

ஜோதி 28 — இராக்ஷத ௵ தை—மாசி (14-2-76) உ — சுடர் 3-4

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| காஞ்சிமுனி அருள் வேட்டல்! | — | 49 |
| பிரார்த்தனை உரை | — | 50 |
| உலக இந்து மகாநாடு | — | 51 |
| யோக காயத்ரி சுலோகங்கள் | — | 57 |
| அருள் உபதேசங்கள் | — | 58 |
| ஆலோசனைகள் | — | 63 |
| இலங்கையில் ஓர் இல்லறஞானி | — | 66 |
| பரம்ஜோதி தரிசனம் | — | 67 |
| ஞானானந்தகிரி சுவாமிகள் | — | 69 |
| ஆலய வழிபாடும் அதன் நோக்கமும் | — | 72 |
| பிரளய நடனம் | — | 77 |



### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆயுள்சந்தா | 100—00 |
| வருடச்சந்தா | 6—00 |
| தனிப்பிரதி | 1—00 |

கௌரவ ஆசிரியர்: திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி. [போன்: 353]

# காஞ்சிமுனி அருள் வேட்டல்!

(புலவர் தி. அ. ஜானகிராமன்)

விண்ணுள வருகின்ற வெண்ணிலவு வேண்டுமென
விழைகின்ற குழந்தை போல
கண்ணோடு உளம்சேர்த்து கனிவான முகம்நோக்கி
கரைகின்ற குழந்தை போல
பண்ணோடு வாழ்கின்ற பைந்தமிழில் ஒருதுளியைப்
பரிவோடு கற்று வந்து
மண்ணோடு உய்யவந்த மறையாளும் காமகோடி
அருள்வேண்டிப் பாட லுற்றேன்.

மறைகூறும் பொருளாக இறைகாட்டும் வழியாக
குருவாக இருக்கும் உன்னை
கரைகாண முடியாத கடலாக வானாகி
நிறைந்தாட்சி செய்யும் உன்னை
பிறைகொண்ட இரவாகக் கருக்கொண்ட முகிலாக
அருளாட்சி செய்யும் உன்னை
மறைகூறி மணம்கூட்டி கரம்கூப்பி சிரம்தாழ்த்தி
தரைதொட்டு வணங்கு கின்றேன்.

குறைகொண்ட மனிதர்க்குக் குறைபோக்கி நிறைவாக்கும்
குடையாகும் நினது கண்கள்
கறைபட்ட மனத்திற்குக் கறைபோக்கும் புனலாகும்
கங்கையாம் நினது கண்கள்
கறைபட்ட மனிதற்குக் கடலான கவலைக்குக்
கரையாகும் நினது கண்கள்
அறியாமை இருள்போக்கும் அருட்கண்கள் நின்கண்கள்
நேர்நோக்கக் கூசு கின்றேன்.

ஒருபொழுது வாழ்ந்தாலும் இறையோடு உறவாடும்
மலர்க்கூட்டம் காணு கின்றேன்
திருவோடு வாழ்ந்தாலும் இறையோடு கலவாத
கல்நெஞ்சம் காணு கின்றேன்
ஒருநெஞ்சம் மலராக மறுநெஞ்சம் கல்லாக
தடுமாற்றம் காணு கின்றேன்
மறுவாழ்வு இல்லாது இறையோடு ஒன்றுகும்
மெய்வாழ்வு வேண்டு கின்றேன்.

# பிரார்த்தனை உரை

(பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், உலக இந்து மகாநாட்டின்போது அனுப்பிவைத்தது.)

'பிரமத்தை அறிய ஆசை' என்று தொடங்கிய பிரம சூத்திரத்தின் இரண்டாஞ் சூத்திரம் 'எங்கிருந்தும் இதன் தோற்றம் முதலியன' என்று உலகத் தோற்றத்தின் மூலமாகிய முதலை ஆராய்கின்றது.

கயிற்றரவு வெறுந் தோற்றமேயாயினும், கயிறாகிய முதலைக் காணுதற்கு உபகாரமாய் இருக்கின்றது.

"இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்பது திருவாசகம்.

"வேத நூல் உலகர்க்கு" என்கின்றது சித்தியார்.

உலகராவார் 'எங்கிருந்தும் இதன் தோற்றம்' என உலகத்தை ஆராயும் வேத இருடிகள்

வேத இருடிகள் முயன்று காணும் உண்மை சத்தினிபாதர்க்கு முயலாமலே பூர்வ தவ விசேடத்தால் லபிக்கின்றது. அப்பொழுது அதற்கு ஆகமம் என்று பெயர். வேதம், ஆகமம் என்ற சொற்களே இதனை விளக்கும்.

நமது சமயம் வைதிக சைவம். வேதநெறி வந்த சைவம் என்பது கருத்து. சைவம் ஆகமநெறி.

"வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க" என்பது பெரிய புராணம்.

இங்கே கண்ட வேதாகம நெறி, உலக இந்து மகாநாட்டில், தவ சிரேட்டர்களான காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அங்கீகார ஆசிபெற்றுப்பயன் செய்வதாக என்று திருவருளைப் பிரார்த்திப்போமாக!

# உலக இந்து மகாநாடு

(ஆசிரியர்)

இம்மாத முற்பகுதியில் சென்னையில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டிற்கு மூலகாரணமாய் இருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளுடைய திருமுகப் பொலிவுடன் ஆத்மஜோதி வெளிவருவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றோம். 'புதுப்பெரியவாள்' என்று அன்பர்கள் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் சுவாமிகள், காஞ்சி காமகோடி பீடத்தில் 69ஆவது பட்டத்திற்குரியவராக 1954ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் பட்டம் சூட்டப்பட்டார்கள். பூர்வாச்சிரமத்தில் இளமையில் சங்கராச்சாரியார் மடத்தைச் சேர்ந்த வேத பாடசாலையில் இவர் படித்து வந்த போது இவரது சாந்தம், பொறுமை, தெய்வீகப் பொலிவு ஆதியன 68ஆவது பட்டத்தில் இருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளுடைய உள்ளத்தைச் கவர்ந்தன. திருவருள் தூண்டப்பெற அந்த இளைஞரை அடுத்த பட்டத்திற்குரியவராகத் தேர்ந்தெடுத்தார்.

வேட்டை வாளி என்ற குளவி தான் எடுத்த புழுவைக் கொட்டிக் கொட்டி தன்னுடைய உருவாக்குதல் போல சுவாமிகளும் இளைஞரைத் தமது அருகிலேயே வைத்திருந்து தமது உருவாக்கினார். இராமகிருஷ்ண பரமகம்சதேவர் சுவாமி விவேகானந்தரைத் தேர்ந்தெடுத்து எங்ஙனம் உலக சேவைக்கு என்று அருளினார்களோ அங்ஙனமே பெரியவாள் புதுப் பெரியவாளை உலகத்திற்கு அளித்துள்ளார்கள். பட்டம் கட்டிய அன்று தொடக்கமே பெரியவாள் மோனத்தவத்தில் ஆழ்ந்து விட்டார்கள். சின்னப் பெரியவாள் என்று மக்கள் அழைத்ததைப் பொறுக்காத பெரியவாள் மக்கள் மத்தியில் அவரைப் புதுப் பெரியவாள் என்று அழைத்து தனக்குரிய எல்லா வித மரியாதையும் வணக்கமும் அவருக்கே இனிமேல் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பெரியவாளுக்குத் தற்போது 82 வயது ஆகின்றது. புதுப்பெரியவாளுக்கு 40 வயது ஆகின்றது.

பெரியவாளை மூலமூர்த்தியாகவும், புதுப் பெரியவாளை உற்சவ மூர்த்தியாகவும் எல்லாரும் கொண்டாடுகின்றனர். பெரியவாளைத் தரிசிக்க வேண்டுமானால் அவர்கள் மோனத்தவம் புரியும் கலவைக்குச் செல்ல வேண்டும். அவர்களை நாடிச் செல்பவர்களுக்கு நயன தீட்சையும், அருளாசியும் வழங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். இது அவர்களுடைய பெருஞ் சிறப்பு. இந்து மதத்தின் பழமையிலும் தத்துவத்திலும் பெரியவாள் மிக ஊறித் திளைத்தவர்கள்.

புதுப்பெரியவாள் அல்லலுற்று வாடி வதங்கி நிற்கும் ஏழை எளியவர்கள் வசிக்கும் கிராமங்களை நோக்கிக் கால் நடையாகவே நடந்து சென்று அருளாசி வழங்குவதோடு அவர்களுடைய உள்ளத்திலே இந்து மத உணர்வாகிய ஒளிவிளக்கை ஏற்றி வைக்கின்றார்கள். இன்றைய நிலையில் மக்கள் மத்தியில் இதுவே அவசியமான பெருந் தொண்டாகும்.

கால்நடையாக இராமேஸ்வரம் சென்று அங்கு மண்ணும் சேது தீர்த்தமும் பெற்றுக் கொண்ட சுவாமிகள் கால்நடையாகவே கன்னியாகுமரி, ஸ்ரீசைலம், நாசிக், பஞ்சவடி ஆகியவற்றுக்கூடாகப் பாதயாத்திரை செய்து காசி விசுவநாதப் பெருமானுக்குத் தமது திருக்கரத்தால் சேது தீர்த்தத்தை அபிஷேகம் செய்தார். கேதார், பத்திரி முதலிய இமாலய தலங்களையும் தரிசித்துத் திரும்பினார்கள். காசியில் சிவன் கோயில் ஒன்று ஆகம முறைப்படி கட்டி காமகோடீஸ்வரர் என்ற பெயரும் சூட்டித் தமது திருக்கரத்தினாலேயே கும்பாபிஷேகமும் செய்து வைத்து அருட்சுடர் ஏற்றினார்கள்.

அங்கிருந்து கங்கா தீர்த்தத்துடன் பாத யாத்திரையாகத் தென்னாடு நோக்கி வரும் வழியிலே 29-2-76 தொடக்கம் 5-3-76 முடிய உள்ள ஆறு நாட்களும் உலக இந்து மகாநாடு சென்னை புரசைவாக்கத்தைச் சேர்ந்த தர்மப் பிரசார்ஷ் கல்யாண மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. மகாநாடு முடிந்த அடுத்த நாளே சுவாமிகள் பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளார்கள். ஏப்ரல் மாதம் 4ம் திகதி நடைபெற இருக்கும் காஞ்சி காமாட்சி கோயிலின் புனராவர்த்த கும்பாபிஷேகத்தைத் தமது திருஅருட்கரங்களாலேயே செய்து, பாதயாத்திரை மூலம்

கலவையிலுள்ள குருநாதராகிய பெரியவாளைத் தரிசித்து அவரது திருவருட்கடாட்சத்திற்கு ஆளாக இருக்கின்றார்கள். அங்கிருந்து தொடர்ந்து பாதயாத்திரை மூலம் இராமேஸ்வரம் சென்று தாம் எடுத்து வந்திருக்கும் கங்கா தீர்த்தத்தை இராமேஸ்வரப் பெருமானுக்கு அபிஷேகம் செய்ய இருக்கிறார்கள்.

இராமேஸ்வரம் வரும்போது ஈழத்திற்கும் வந்து அவரது புனிதத் திருவடிகள் தீண்டுவதால் ஈழத்தையும் புனிதப்படுத்துமாறு ஈழத்திலிருந்து உலக இந்து மகாநாட்டிற்குச் சென்ற பிரதிநிதிகள் அத்தனைபேரும் ஏகோபித்த மனதுடன் வேண்டுகோள் விடுத்தனர். சுவாமிகள் அதற்கு விடையாகத் தமது புன்முறுவலை உதிர்த்தார்கள்.

ஈழத்து மக்கள் தவம்செய்யப்பெற்றவர்கள். ஆனால், சுவாமிகளுடைய திருவடி தீண்டப்பெற்று, ஈழமும் புனிதம் அடையும் என்ற நம்பிக்கை கொண்டு, ஆத்மஜோதி மூலம் மறுபடியும் எமது வேண்டுகோளைச் சுவாமிகள் முன் வைத்து சிரந்தாழ்த்தி வணங்குகின்றோம்.

பூரியில் கட்டப்பெற்ற தியான மண்டபம் வைஷ்ணவர்களுடைய சாதனை, பஜனை ஆகியனவற்றுக்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. சைவ, வைஷ்ணவ வேற்றுமைகள் நீங்க திருவெம்பாவை, திருப்பாவை மகாநாடுகள் சுவாமிகளால் கூட்டப்பெறுவது யாவரும் அறிந்ததே.

சுவாமிகள் தினமும் மூன்று, நான்கு மணித்தியாலங்களுக்குமேலாகச் செய்துவரும் சிவபூஜையைத் தினமும் ஆயிரக்கணக்கானோர் தரிசனைசெய்து பெரும்பேறு பெற்று வருகின்றார்கள். கிராமங்களில் தேவாலயங்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு மக்களைக் கவர்ந்து இழுப்பதற்காக எத்தனையோ வேடிக்கை விநோதங்களைத் திருவிழாக்காரர் செய்வதுண்டு. கிராமங்களுக்கு மத்தியிலே அமைக்கப்படும் பெரும் கொட்டகையிலே சுவாமிகளுடைய சிவபூஜையைத் தரிசித்து அவரது திருக்கரத்தால் பிரசாதம் பெறுவதைப் பெரும் பேறாகக் கருதும் மக்கள் பத்தாயிரத்துக்கும் அதிகமாகக் கூடுகின்றார்கள் என்றால் அதன் பெருமை சுவாமிகள் நடாத்தும் சிவபூஜையையே சார்ந்ததாகும்.

சுவாமிகள் சிவபூஜை செய்யும் சந்திர மௌளீஸ்வர லிங்கம் ஆதிசங்கரர் திருக்கைலாயத்திலிருந்து கொண்டு வந்த பஞ்சலிங்கங்களுள் ஒன்று என்று சொல்லப்படுகின்றது. 69 ஆச்சாரியார்களால் பூஜிக்கப்பெற்ற லிங்கம் என்றால் அதன் மகத்துவத்திற்கு வேறு என்னவேண்டும். சுவாமிகளுடைய நாளாந்தக் கடமைகளுள் மிக மிக முக்கியமானது சிவபூஜை செய்தலாகும். அந்தச் சிவபூஜை தினமும் ஆயிரக்கணக்கான மக்களைச் சிவசிந்தனையில் ஆழ்த்திக் கொண்டுவருகின்றது. ஆண்டவனைப்பற்றி வாய் திறந்து ஒரு வார்த்தை பேசாது பூஜைமூலம் ஆயிரக்கணக்கானவர்களைப் சிவபக்தியிலீடுபடுத்தும் சிவபூஜைக்கு இணை இவ்வுலகில் எதுவுமே இல்லை. பல கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்த பெருமையும் பல வேதாகமப் பாடசாலைகளை நடத்திவரும் பெருமையும் சுவாமிகளுக்குரியதாகும்.

வருடந்தோறும் தாம் இருக்கும் இடத்திற்கே ஆஸ்திகர்களை அழைத்து சத்சபை கூட்டுகின்றார்கள். கோவில்களில் சிற்பக்கலைகளை வளர்ப்பதற்காகவும், கிராமியக்கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவும் வேண்டிய திட்டங்கள் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. காஞ்சியில் நடைபெறும் காமாட்சி அம்பாளின் கும்பாபிஷேகத்தின்போது அகில இந்திய இந்துக்களின் மகாநாடு ஆச்சாரிய சுவாமிகளின் தலைமையில் நடைபெற இருக்கின்றது.

உலக இந்து மகாநாட்டின் போது சுவாமிகள் வெளிநாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகளுடன் வெளிநாட்டின் இந்து சமய நிலைபற்றி ஆராய்ந்தார்கள். அந்த ஆராய்வில் பயனாக வெளிநாட்டில் வாழும் இந்துக்களுக்கு இந்தியாவில் உள்ள இந்துக்கள் எந்தெந்த வழிகளில் உதவிபுரியலாம் என்பதை ஆராய இருக்கின்றார்கள். சென்னையில் சுவாமிகள் 100 நாட்கள் வரை தங்கியிருந்த காலத்தில் 52 ஊர்களுக்குப் பாத யாத்திரை செய்து அந்தந்த ஊர்களைப் புனிதப்படுத்தியதோடு மக்கள் உள்ளத்தில் இறையுணர்வையும் தூண்டியுள்ளார்கள். சுவாமிகள் பாத யாத்திரை செய்வதைப் பார்க்கும்போது சமயாசாரியர் நால்வரும் திருக்கோயில்களுக்கு அடியவர்களுடன் சென்று தேவார திருவாசகங்கள் பாடி மக்கள் உள்ளத்தில் பக்திவெள்ளம் புரண்டோடச் செய்த செய்திகள் நினைவுக்கு வருகின்றன.

சுவாமிகள் சென்னையைவிட்டுக் காஞ்சியை நோக்கிப் புறப்பட்டபோது சென்னை மக்கள் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, மராட்டி, குஜராத்தி, வங்காளி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உபசாரப்பத்திரங்கள் வாசித்து அளித்த காட்சி அங்கு கூடியிருந்தார் அனைவரையும் மெய்மறக்கச் செய்தது: மொழிகளால் பல்வேறுபட்டவர்களையும் சமூக அமைப்பினால் பல்வேறுபட்டவர்களையும் ஒன்றுபடுத்துவது இந்துமத உணர்வு என்பதனை உலக இந்து மகாநாட்டில் காண முடிந்தது.

உலக இந்து மகாநாட்டிற்கு ஸ்ரீ லங்கா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, குவைத், மொறிஷஸ், இந்துநேசியா ஆகிய நாடுகளிலிருந்து 60க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். பிரதிநிதிகளுக்குரிய கூட்டம் எல்லா நாட்களும் நடைபெற்றன. அவற்றின் பேறுகச் சுவாமிகள் உலக இந்து மக்களுக்குப் பின்வரும் செய்திகளைப் பிரகடனப்படுத்தினார்கள்.

1 அகில உலக இந்துக்களிடையே ஒரு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அகில உலக இந்து மகாசபை ஒன்றை உருவாக்கி உள்ளது.

2 இந்துக்களிடையே சில காலமாக இருந்துவரும் வரதட்சிணை வாங்கும் முறையைக் கைவிட்டுவிட வேண்டும் என்று மகாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது.

3 உலகத்தில் எந்தத் தேசத்தில் எந்தப் பகுதியில் இந்துக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் வாழ்ந்துவரும் அந்த அரசாங்கத்திற்கு விசுவாசமாய் இருப்பதோடு இந்துக் கலாச்சாரம், இந்துப் பண்பாடு ஆகியவை தமது வாழ்க்கையின் மூலமாக வெளிப்படும் வகையில் இந்துக்களாகவும் வாழவேண்டும் என்று இம்மகாநாடு கேட்டுக்கொள்கின்றது.

4 எந்தத் தேசத்தில் எந்தப்பகுதியில் இந்துக்கள் வாழ்ந்தாலும் மதவேற்றுமையின்றி சகோதர மனப்பான்மையோடும் இந்து என்ற உணர்வோடும் வாழ்க்கையை நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றது.

5 ஒவ்வொரு இந்துவும் எந்தத் தேசத்தில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் காலையில் கடவுள் சிந்தனையோடு எழுந்து உறங்குவதற்கு முன் இறைவனைத் தியானித்து வரும் பழக்கத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றது.

6 இந்துக்களிடையே சமயப்பற்றை ஊட்டி வளர்ப்பதோடு சமூக சேவை செய்யும் பழக்கத்தையும் வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றது.

7 உலக இந்து மகாநாட்டில் மேற்கொள்ளும் பணிகளுக்காக பரிபூரணமாக ஆதரவும் பொருளுதவியும் அளிக்கும்படி உலகில் உள்ள இந்து சமய இந்து சமூக ஸ்தாபனங்களையும் தர்ம ஸ்தாபனங்களையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.


# குமரகுருபரன்

(மாத வெளியீடு)

வருடச் சந்தா: 7 ரூபா.

கிடைக்குமிடம்: ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீ வைகுண்டம், தமிழ்நாடு.
(தென் இந்தியா)

தெய்வ நினைவும், சைவ நீதியும், குறைந்துவரும் இக்காலத்திலே தெய்வீகக் கட்டுரைகளைத் தாங்கிவருவது. ஒவ்வொருவர் இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டிய ஒரு சஞ்சிகையாகும்.


## ஆண்டவனின் அளப்பரும் சக்தி

பரம ஆனந்த சொரூபியான மாதவனின் கருணை ஊமையையும் வாக்கு வன்மை படைத்தவனுக்கவல்லது. முடவனையும் பெருமலையைக் கடக்கச் செய்வது. அத்தகைய பெருமானுக்கு வணக்கம்.

—பாகவதம்

# யோக காயத்ரி சுலோகங்கள்

கோடி சூர்ய ப்ரகாசம் க்ஷீரவர்ணம்
நிருபாதிகம் சுத்தம் தஹராகாச சம்ஸ்திதம்
ப்ரஹ்மஸ்வரூபம் ஆத்மானம் ஏகம் ஓம்
அம் பீஜஸ்வரூபம் உபாஸே.

கோடி பூர்ணிமா சந்த்ர ப்ரகாசம்
சர்வஸ்வரூபம் சர்வசம்ஸ்திதம் ஆத்மஸ்வரூபம்
சோபாதிகம் சர்வகல்யாண குணோஜ்வலம்
ஓம் வம் பீஜஸ்வரூபம் உபாஸே.

சுத்த தேஜஸ்வரூபம் மஹாசக்தியுதம்
அமிர்தஸ்வரூபம் தத் ப்ரஹ்மஸ்வரூபம்
தத் ஸதோம் ஓம் ஹ்ரீம் பீஜஸ்வரூப முபாஸே.

சரத் சந்த்ர காந்திம் சர்வ வித்யாதிஷ்டாத்ரீம்
பாலாம் திரிபுரசுந்தரீம் ஷட்கோண
மண்டலாம் ஓம் ஐம் பீஜஸ்வரூபம்
சரணமஹம் ப்ரபத்யே.

ரம்ய காந்திம் சர்வமன்மத மன்மதாம்
சர்வ வஶ்ய காரிணீம் சந்த்ரமண்டல வாஸினீம்
தேவீம் சக்திம் அமிர்தஸ்வரூபாம்
காமகலாம் ஓம் க்லீம் பீஜஸ்வரூபாம்
சரணமஹம் ப்ரபத்யே.

அமிர்த காந்திம் அமிர்தஸ்வரூபாம்
ப்ரஹ்ம சக்திம் அமர்தோஹாம் அஜரோஹம்
ஓம் ஸௌஃ பீஜஸ்வரூபாம்
சரணமஹம் ப்ரபத்யே.

### அகில உலக இந்து மகாநாட்டில்
## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
## ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
### சுவாமிகள் அருளிய
# அருள் உபதேசங்கள்

(தொகுத்து எழுதியவர்: நா. முத்தையா)

மனிதன் மனிதனுக மட்டுமன்றி தூய்மையாகவும் வாழ மதக் கருத்துக்களே அடிப்படையாக உள்ளன. ஆகவே சமயப்பற்றும் கடவுள் உணர்வும் மக்களிடையே ஏற்பட வேண்டும். பொதுவாகப் பற்றுக் கூடாது என்று நமது மதம் கூறுகின்றது. ஆனுல் கடவுளிடம் பற்றைப் பற்றிக் கொண்டால் மற்றப் பற்றுக்களை இலகுவில் விட்டுவிடலாம். பிறபற்றுக்களை விடுவதற்காக இறைவனைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று சொன்ன மதம் நம்முடைய இந்து மதமாகும். இந்தக் காலத்தில் சிலர் இறைப்பற்று மதப்பற்று முதலியவற்றை மட்டுமன்றி குடும்பத்தினருடன் கூடப் பற்றில்லாது வாழ்கின்றுர்கள். வேறு எந்தப் பற்றைப் பற்றிக் கொள்ள முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் குடும்பத்தினருடனுவது பற்றோடு இருக்கவேண்டும். மதப்பற்றின் மூலம் அன்பும் அருளும் ஏற்படும். மதத் துறையில் தூய்மைக்கும் பக்திக்கும்தான் முதலிடம். ஆகவே ஒவ்வொரு இந்துவும் தங்கள் தங்களால் இயன்றளவு இறையுணர்வையும் மதப்பற்றையும் வளர்க்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

### இயற்கையான சமயப்பற்று:

ஒரு காலத்தில் இந்து மதம் உலகம் முழுவதிலும் பரவி இருந்தது. அதனை நினைவுபடுத்தும் வகையில்தான் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இந்து மகாநாட்டிற்குப் பிரதிநிதிகள் வந்துள்ளனர். நம்முடைய கலாச்சாரமும், தத்துவங்களும், சமஸ்கிருத மொழியும், பண்பாடும், உலகெங்கும் பரவியிருந்தன. அப்படியிருந்த நம்முடைய

மதம் இன்று ஒரு மகாநாடு போட்டுச் சொல்ல வேண்டிய நிலைக்கு வந்துவிட்டதே என்று வருந்த வேண்டியதாக இருக்கின்றது. பொதுவாக மக்களுக்கு ஆஸ்திகப்பற்றும், சமயப்பற்றும், தெய்வீகப்பற்றும் இருக்கின்றன. புண்ணிய நதிகளில் நீராடுவதற்கும், கோயில் திருவிழாக்களுக்கும் மக்கள் எவ்வித நிர்ப்பந்தமும் இன்றித் தாங்களாகவே இலட்சக்கணக்கில் செல்லுகின்றார்கள். யாருடையபயமுறுத்தலுக்காகவும் அவர்கள் செல்லவில்லை. இயற்கையாகவே மக்கள் அவற்றை நாடிச் செல்லுகிறார்கள். நிர்ப்பந்தத்தின் மூலம் எந்தக் காரியமும் செய்ய வேண்டும் என்ற நிலை நம்முடைய மதத்தில் இல்லை.

## வெளிநாடுகளில் இந்து மதம்:

நமக்கு மதச் சுதந்திரம் இருக்கின்றது. யாருடைய நிர்ப்பந்தமுமின்றி மத உணர்வோடு மதசம்பிரதாயங்களைச் செய்வது என்பது, பழங்காலந்தொட்டு இருந்து வருவது நம்முடைய மதத்திற்குரிய தனித்துவமாகும். நம்முடைய மதம் மிகவும் பழைமையானது. வெளிநாடுகளில் வாழும் இந்துக்கள் அமைதி அளிக்கும் மார்க்கம் இந்தியாவில்தான் இருக்கிறது என்பதை புரிந்துகொண்டிருக்கின்றார்கள். அதன் காரணமாகத்தான் நம்மதத்தை எடுத்துச் சொல்லப்போகின்றவர்களுக்கு வெளிநாடுகளில் நல்ல மதிப்புக் கொடுக்கின்றார்கள். இந்த வாய்ப்பைச் சிலர் பயன்படுத்திக் கொண்டு யோகாசனம், வேதாந்தம், சித்தாந்தம், தத்துவம் ஆகியவற்றைப் பரப்புவதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றார்கள். ஆயினும், இவர்கள் சொல்வதன் மூலம் வேற்று நாட்டவர்கள் நம் மதத்தைப்பற்றிமுழுதும்புரிந்துகொள்ளமுடியவில்லை. மதத்தைப்பற்றிச் சொல்லப் போகின்றவர்களும் தங்கள் ஸ்தாபனத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றே கருதுவதால் ஐந்தாறு விதமாகச் சொல்கிறார்கள். ஆகவே இப்படிப் பலவிதமாகச் சொல்லப்படுவதில் எது சரி என்பதைப் புரிந்துகொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்து பலர் இங்கு வருகிறார்கள். நம்முடைய நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகிறவர்களும் தத்துவங்களைத் தெரிந்து கொள்வதற்காகப் போவதில்லை. நம்முடைய தத்துவங்கள் வெளிநாட்டில் உள்ள வேறு மதஸ்நர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சொல்லத்தான்போகிறார்கள்.

வெளிநாடுகளில் வாழும் இந்துக்களைப் பொறுத்த வரை, அவர்கள் சமயப்பற்றும் கடவுள் உணர்வும் நிறைந்தவர்களாக இருக்கின்றார்கள். பூஜை அனுஷ்டானங்களிலும் நம்மைவிடச் சிறந்தவர்களாகவே இருக்கின்றார்கள். வெளிநாடுகளில் உள்ள இந்துக்கள் தனிப்பட்ட முறையில் தங்கள் வாழ்வு கடைத்தேறுவதற்கான வழியைக் கண்டுபிடித்து விட்டார்கள் என்றே கூறலாம். அப்படிப்பட்டவர்களுக்குச் சமயப் பிரச்சனை ஏதாவது ஏற்படுமானால் என்ன செய்வது என்றே தெரியவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முடிவு சரியான இடத்திலிருந்து வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

## சைவமும், வைணவமும் இந்து மதத்தின் இரு கண்கள்:

**வே**தங்கள் சிவனையும், விஷ்ணுவையும் கடவுள் எனக் குறிப்பிட்டுள்ளதால் சைவமும் வைணவமும் இந்து மதத்தின் இரு கண்கள் எனத் திகழ்கின்றன. நீறணிபவர்களை சைவர்கள் எனவும் திருமண் அணிகிறவர்களை வைணவர்கள் எனவும் அடையாளங்களைக் கொண்டு கூறியபோதிலும் அவரவர் மானசிகமாக வேறு வேறு மூர்த்தங்களை வழிபடும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்து வருகிறது. அடையாளச் சின்னங்கள் வேறு வேறாக இருந்தாலும் இரு சமயங்களினதும் குறிக்கோள் ஒன்றே. மாமிசம் சாப்பிடாதவர்களைத் தென்னாட்டில் சைவர் என்று கூறுவது போல, வடநாட்டில் மாமிசம் சாப்பிடாதவர்களை வைணவர் என்று கூறுவார்கள். இதிலிருந்து ஒரு உண்மை புலப்படுகிறது. இரு சமயங்களும் புலால் உண்ணாமையை வலியுறுத்திக் கூறுகின்றன. எல்லோரும் பகவானின் பக்தர்களாவதோடு இந்து என்னுங் குடும்பத்தையும் சேர்ந்தவர்களுமாவர்.

## அமைதியும் ஆனந்தமும் அளிப்பதே சமயம்:

**ம**னிதனுக்குப் பரிபூரண அமைதியையும் ஆனந்தத்தையும் கொடுப்பது மதம். ஆகவே மதத்தினால் பூசல் விளையும் என்றும் அது மக்களுக்கு விரோதமானது என்றும் சொல்வது பொருத்தமற்றதாகும். திரேதாயுகத்

திலும் துவாபரயுகத்திலும் பகவான் மனித அவதாரம் எடுத்தார். கிரேதாயுகத்தில் முழுக்க முழுக்க நன்மையே இருந்தது. திரேதாயுகத்தில் நன்மை அதிகமாகவும் தீமை கொஞ்சமாகவும் இருந்தது. துவாராபரயுகத்தில் நன்மை யுந் தீமையும் சரி சமமாக இருந்தன. ஆனால் கலியுகத்தில் தீமை முக்கால் பங்காகவும் நன்மை கால் பங்காகவும் இருக்கிறது. இந்த நிலையைச் சீர் செய்யவே உலக இந்து மகாநாடு அவசியமாகின்றது.

கெடுதல்கள் தோன்றும் போதெல்லாம் பகவான் அவதாரம் செய்வார் என்றபோதிலும் கலியுகத்தில் அவதாரம் செய்யாததால் பகவான் இருக்கிறாரா? என்ற ஐயம் ஏற்படலாம். ஆனால் அவதாரத்தின் நோக்கம் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதாகும். இந்த நோக்கத்திற்காகப் பகவான் கலியுகத்தில் அவதரித்தால் எத்தனைபேரைக் கொல்லுவது? இத்தனைபேரையா கொல்லுவது? என்ற எண்ணத்தில்தான் பகவான் அவதாரம் எடுக்கவில்லை. மற்ற யுகங்களைப்போல அல்லாமல் கலியுகத்தில் பகவானை அடைவது சுலபம். எத்தனை கெடுதல் புரிந்தவராயினும் பகவானை நினைந்து உருகினால் ஆண்டவன் அருள்புரிவான்.

## ஆலய வழிபாட்டின் சிறப்பு:

பிறவாமை என்னும் பேற்றினை அடைவதற்காகவே மனிதப் பிறவி வாய்த்துள்ளது. இப் பிறப்பிலேயே ஆண்டவனை வழிபட்டு பிறவாமையைப் பெறுவதற்காகவே ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆலயங்களில் விளங்கி நிற்கும் ஆண்டவனை வழிபட்டு மனித குலம் உய்வுபெற வேண்டும்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பது முதுமொழி. கடவுளை நம்பிப் பிரார்த்தனை செய்தால் கஷ்டம் தரமாட்டார். ஒரே கடவுளை வழிபடுவது நல்லது. ஆனாலும் பல பெயர்களிலும் உருவங்களிலும் கடவுளை வழிபடுதல் தவறில்லை. ஒரு பிள்ளையை வீட்டில் அம்மா ஒரு பெயரிலும் அப்பா ஒரு பெயரிலும் அழைப்பார்கள் பள்ளியில் ஆசிரியர் வேறொரு பெயரைச் சொல்லி அழைப்பார். அந்தப் பிள்ளையோ ஒவ்வொரு வேளைக்கும் ஒவ்வொரு உடை-

யணிந்து செல்லும். இத்தனைக்கும் ஆன்மா மாறுவதில்லை. பெயர் மாறும்; உடை மாறும். அதுபோல பல பெயர்களிலும், உருவங்களிலும் இருந்தாலும் ஆண்டவன் ஒருவனே. ஒவ்வொருவரும் எப்படியும் பற்றிக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே கடவுளுக்குப் பல உருவங்கள். உருவம் அற்ற அருவமாகவும் கடவுள் இருக்கின்றார்.

பூவுலகத்தில் மனிதப் பிறவியில் ஆலயங்களில் ஆண்டவனை வழிபடும் நாம் மிகவும் புண்ணிய சாலிகள். கிரேதாயுகத்தில் கோயில்களும் முகூர்த்தங்களும் இல்லை. கிரேதாயுகத்திலும் துவாபர யுகத்திலும் கோயில்கள் இல்லை என்ற போதிலும் வழிபாட்டு முறை ஆரம்பமாகிவிட்டது. இராமன் வனம் சென்றபோது தாயார் கோசலை வழிபாடு செய்து கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகின்றது. கிருஷ்ணன் துவாரகைக்குச் சென்றபோது பலர் பூஜைசெய்ய ஆரம்பித்தனர். இந்தப் பூஜைகள் எல்லாம் கோயில்களின் வாயிலாக நடைபெற்றவை அல்ல. உருவங்களையும் விக்கிரகங்களையும் வைத்துக்கொண்டே பூஜை செய்தார்கள்.

கலியுகத்தில் கோயில்கள் ஏற்பட்டன. ரிஷிகள் மகான்கள் இருந்து வழிபட்ட இடங்களில் கோயில்களைக் கட்டுவது ஒரு முறை. தவம் செய்யும் மகரிஷிகளுக்காக இயற்கையாகவே இறைவன் காட்சி அளித்தபோது சுயம்புவாக இறைவன் எழுந்தருளியது ஒருமுறை. இப்படிப்பட்ட கோயில்களைச் சுயம்பு லிங்கங்கள் என்று சொல்வது உண்டு. தேசத்தில் உள்ள ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு தனி வரலாறு உண்டு. பழங்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்ட போதிலும் பின்னரும் கட்ட ஆரம்பித்தோம். அப்படி கட்டிய போதிலும் வழிமுறைகளுடன் கட்டியுள்ளோம். வேதாகம முறைப்படி கோயில்களைக் கட்டியுள்ளோம் பிரகாரங்கள், மண்டபங்களையுங் கட்டியுள்ளோம். முக்கியமாகக் கோவிலில் அர்த்தமண்டபம் இருக்க வேண்டும். அதன்பிறகு பிரகாரங்கள் ஐந்து முதல் ஏழுவரை சக்திக்கேற்ப வைத்துக்கொண்டிருக்கிறோம்.

இறைவனை ஆலயங்களில் வழிபடுவதென்பது பூலோகத்தில்தான் முடியும். சுவர்க்க லோகத்திலும் சரி நரக லோகத்திலும் சரி, இத்தகைய வழிபாட்டைச் செய்ய

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

## ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் முன்னிலையில்

**1-3-76 முதல் 5-3-76 வரை நடைபெற்ற**

**உலக இந்து மகாட்டில்**

அகில இலங்கை இந்து மாமன்றம், ஆத்மஜோதி நிலையம்
ஆகியவற்றின் பிரதிநிதியாகச் சென்ற

**திரு. நா. முத்தையா அவர்கள்**

வழங்கிய —

# ஆலோசனைகள்

பாடசாலைகளில் சமய பாடத்தை கட்டாயமானதோர் பாடமாகக்கொண்டு வந்து அதனை அமுல் நடத்தும் ஒரே ஒரு தேசம் உலகம் முழுவதிலும் ஸ்ரீ லங்கா ஒன்றுதான் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இங்கு வாழும் புத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்களாகிய நான்கு சமயத்தவர்களுக்கும் தத்தம வழிபாட்டினை நடத்துவதற்கு மத சுதந்திரம் இருக்கும் அதே வேளையில் பாடசாலைகளல் அந்தந்தச் சமயப்பிள்ளைகள் அந்தந்த சமய உண்மைகளையும், தத்துவங்களையும், வழிபாட்டுமுறைகளையும் அறிந்து கொள்வதற்கேற்ற வழி முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதே நேரத்தில் ஒரு சமயப்பிள்ளை மற்றைய சமய உண்மைகளை அறிந்து கொள்வதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இத்துறையில் ஸ்ரீ லங்கா அரசு உலகிற்கே வழிகாட்டியாக அமைந்ததற்கு இந்த மகாநாடு ஸ்ரீ லங்கா அரசுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

---

முற்பக்கத் தொடர்ச்சி—

முடியாது. இதற்காகவே இந்திரன் பூவுலகத்திற்கு வந்து வழிபாடு செய்தான். வழிபாடு செய்தபின் தேவர் உலகத்திற்குச் சென்று விட்டான் என்று சொல்லப்படுகிறது. தேவர்களுக்கே நல்வழி இறை வழிபாடு என்றால் மனிதர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அவரவர் செய்யும் நன்மை தீமைகளையும் சித்திரகுப்தன் கணக்கெழுதிக் கொள்கிறான் என்பதையும் மனதில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் யுவதிகள் பொதுவாக உலகம் முழுவதிலுமே புலனடக்கமின்றி புதியதோர் உத்வேகத்திலே சென்று கொண்டிருக்கின்றனர்கள். அவர்களை நல்வழிப் படுத்தி நல்வழியிலே செல்வதற்கான வழி வகைகளை இம்மகாநாடு ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதாகவும் எல்லா மக்களுக்குமே பொதுவானதாகவும் கருதப்படுகின்ற அன்பு, பக்தி, ஒழுக்கம் ஆகியவை மக்கள் மத்தியில் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற அளவுக்கு எமது பணிகளை விருத்தி செய்து கொள்வதற்கு இம்மகாநாட்டில் நடைமுறைப்படுத்தும் திட்டங்களை வகுத்துக் கொள்ளுதல் மிகச் சிறந்தது எனக்கருதுகின்றேன்.

ஸ்ரீ லங்கா அரசு செய்தது போன்று மற்றைய அரசுகளும் பாடசாலைகளில் மதபோதனை கட்டாய பாடமாக்கப்படல் வேண்டும் என்று இம்மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றி அதனை மற்றைய அரசுகளுக்கும் அனுப்பி வைத்தல் சிறந்ததாகும்.

கல்வியறிவில்லாத நிலையிலும், தம்மை இந்து சமயத்தவர் என்று தெரிந்துகொள்ளாத நிலையிலும் பல குடும்பங்கள் வாழுகின்றன. அவர்களிடையே கடவுள் உணர்வை ஏற்படுத்துவதற்கான வழிகளை வகுத்துச் செயல்படுத்துதல் மிகச் சிறந்த சேவையாகும் எனக் கருதுகின்றேன்.

இந்துமத தத்துவங்களை மாத்திரம் அறிந்துவிட்டால் போதாது. அவற்றிற்கான சாதனை நெறிகளும் நெறி முறைப்படுத்தப்படல் வேண்டும்.

மக்கள் மத்தியில் தீவிர பிரச்சாரம் செய்து கோயில் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

[illegible]மும் தத்தம் வீடுகளில் வழிபாடு செய்யும் முறைகள் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்தற்கான திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

பலர் ஒன்றுசேர்ந்து தத்தம் வீடுகளில் வீட்டு வழிபாட்டைக் காலத்திற்குக் காலம் செய்து வருவதனால் சமூக ஒற்றுமையை உண்டாக்கலாம்.

வளர்ந்துவரும் விஞ்ஞானத்தைச் சமய வளர்ச்சிக்காக எவ்வெத்துறைகளில் பயன்படுத்தலாமோ அவ்வத்துறைகளில் பயன்படுத்துதல்பற்றி ஆலோசித்தல்.

பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் சமய தத்துவங்கள் புராணங்களின் உட்பொருட்கள் சம்பந்தமாக விளக்கங் கொடுத்தற்கான வழிவகைகளை ஆலோசித்தல்.

ஒவ்வொரு இந்துவும் சமயதீட்சை பெற்று தினமும் தனது வாழ்க்கையில் அநுட்டானத்திற்குக் கொண்டுவருவதற்கான வழிகளை வகுத்தல்.

இந்து சமயத்திற்கான கொடி ஒன்றை இம்மகாநாட்டிலே பிரகடனப்படுத்தி அதனைச் சமய விழாக்களிலும் கோயில் விழாக்களிலும் ஏற்றிவைத்தற்கான பழக்கத்தை மக்களிடையே ஏற்படுத்துதல்.

பன்னிரு திருமுறைகளைப்பற்றிய பிரச்சாரம் நடைபெற ஏற்பாடு செய்தல்.

சினிமாவையோ, தொலைக்காட்சியையோ சமய வாழ்வுக்குப் பயன்படுத்தும் முறைகள் பற்றி ஆலோசித்தல்.

இந்து சமயத்தவர்களுக்கு உலக ரீதியான ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்துதல்.

உலக மக்களுக்கிடையே சகோதரத்துவத்தைப்பேணும் வகையில் அறிவொளி காட்டுதலும், மகாநாடுகள் கூட்டுதலும்.

பாமர மக்களிடையே நடைபெறவேண்டிய சமயத் தொண்டுகள் பற்றி ஆலோசித்தல்.

இந்து சமயக்கொள்கைக்கு ஒவ்வாத பலியிடுதல் போன்றவற்றைத் தடுப்பதற்குச் சட்டமூலம் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானது.

பெரும் பொருட்செலவு செய்து நடைபெறுங் கிரியைகளைக் குறைத்து பக்தி பூர்வமான நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.

# இலங்கையில் ஓர் இல்லற ஞானி

(வித்துவான். ந. சுப்பையாபிள்ளை)

இற்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முன்னதாகிய கடைச் சங்க காலத்திலே தென்றமிழ் நாட்டிலே வாழ்ந்த திருவள்ளுவர் "ஓர் இல்லற ஞானி" என அவர் இயற்றிய திருக்குறள் நூலகத்தே காணப்படும் சான்றுகளைக் கொண்டும் கர்ண பரம்பரை வழக்கைக்கொண்டும் அறிகின்றோம்; இது உலகப் பிரசித்தமான காரியம்.

அதற்கு முன்னே, திரேதாயுகத்திலே இராமாயண காலத்திலே மிதிலாபுரியில் இருந்து அரசாண்ட ஜனக மகாராஜன் "ஓர் இல்லற ஞானி"யாக வாழ்ந்தான் என்றும் அறிகின்றோம்; அவ்விஷயமும் உலகப் பிரசித்தமானது.

இக்காலத்திலே. சிவத்திரு க. இராமச்சந்திர அவர்கள் "இலங்கையில் ஓர் இல்லற ஞானி"யாகத் திகழ்கின்றார் என்று உலகமறியத் தெளியத் தருகின்றார் நாவலப்பிட்டி — மாதாந்த வெளியீடாகிய "ஆத்மஜோதி" இதழின் ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள், தாம் எழுதிய "இலங்கையில் ஓர் இல்லற ஞானி" என்று அதே பெயர் கொண்ட நூலினால்.

இந்நூல் வாசகர்களுக்குப் படிக்கப் படிக்கத் தெவிட்டாத சுவை பயக்கும் இனிய தெள்ளிய தமிழ் வசன நடைப்பாணியில் மிளிர்வது; அதனால். அதனை வாசிப்போர் சோர்வடையாமல் ஊக்கங் கொள்ளுதற்கு ஏற்ற விறுவிறுப்பான நடையுமுடையது; தொடர்ந்து மேன்மேல் வாசிப்பதற்குப் பேரவாவினை எழுப்புந் தன்மையதாயும் திகழ்கின்றது. இந் நூலைப்பெற்று வாசிப்போர், தற்காலத்தே தமக்குச் சாபாடியாய் இல்லற ஞானியாக வாழ்க்கை நடாத்தும் சிவத்திரு க. இராமச்சந்திரனாரது தூய ஒழுகலாற்றினைப் பின்பற்றி, தமது இலௌகிக விஷயம்பற்றிக் கொண்டொழுகும் கருமங்களோடு கூடவே மற்றைய ஆன்மீக ஞான விஷயக் கருமங்களையும் தமக்கு இலட்சியமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையும் விருப்பமும் மேற்கொள்வோராவர் என்பது எமது கருத்தும் நம்பிக்கையுமாம்.

இத் தமிழ்ப் பெருமகனார் தமிழும் சைவமும் நாவலர் போல் சமரசக்கொள்கையும் மேலோங்கச் சேவை செய்து கீர்த்தியுடன் இனிது வாழ. அவருக்கு நீண்ட ஆயுள் ஆரோக்கிய ஐசுவரிய ஞானங்களை ஈந்தருளும் வண்ணம் எல்லாம்வல்ல இறைவனாகிய கதிர்காம வேலாயுதக் கடவுளை வந்தித்து வாழ்த்துவோமாக.

# பரம்ஜோதி தரிசனம்

(மாத்தளை—அருணேசர்)

பூரண சம்பன்னகுண சுயப் பரப்பிரமமாய், சகல பொருள்களுக்கும் மேலான பொருளுமாய், எல்லா ஒளிகளுக்கும் மேலான ஒளியுமாய், தன்னொளிக்கு முன் எவ்வொளியும் மங்கி இருளச் செய்யும் சோதிச் சுடர்மயமுமாய், எல்லா அழகுக்கும் மேலான அழகுமாய், எச்சமயங்கட்கும் பொதுவாகிச் சிறப்பாகி விளங்கும் கடவுளையே பரம்சோதி எனப்படும்.

அப்பெரிய சோதியின் அணுப்பிரமாணமான சிற்சோதியாகிய ஆதமா நமக்குள் அமைந்திருக்கின்றது. ஆத்மஜோதியாகிய இச்சிற்சோதியானது தனது படைப்பின் இடமாகிய பரஞ்ஜோதியை அடைய வேண்டும் என்ற அவாவினால், தான் புகுந்திருக்கும் உடம்பின் மனதை நல்வழிகளில் தூண்டிக்கொண்டிருக்கும் அந்த சிற்சோதியாகிய "நான்" என்பவனின் விருப்பத்திற்கு இணங்க மனம் கீழ்ப்படிந்து நல்ல செய்கைகளைச் செய்தால் அதுதான் புண்ணியமாகும்.

நமக்குள் அமைந்திருக்கும் சிற்பசோதியாகிய "நான்" என்பது கடவுளுடைய அம்சமென்றும், அதற்கு அபார சக்தி உண்டென்றும் அறிந்து கொள்வதே தன்னைத்தான் அறிதலாகும். அதுவே சிறந்த பக்தியாகும்.

வெவ்வேறான இரு பொருள்களால் நாம் உண்டாக்கப் பட்டிருக்கின்றோம். அவற்றுள் ஒவ்வொன்றும் தன் இயல்புக்குச் சார்பானதை அதிக விருப்பத்துடன் நாடிச் செல்கின்றது. நல்வினையாகிய புண்ணியத்திற்கு மூலாதாரமும் சிறப்புப் பொருளுமான ஞான காரியங்களை ஆன்மா விரும்பித் தேடுகின்றது தீவினையாகிய பாபத்துக்கு புசிகரணமான மாமிச இன்ப காரியங்களை உடல் இச்சிக்கின்றது. உடலும் அதோடு சேர்ந்த மனமும் நான் என்னும் ஆத்மா சொல்கிறதைக் கேளாமல், உடலழகையும், ஒளியையும், ஐசுவரிய மேன்மையையும் நாதகீத இன்னிசை ஓசையையும், மலர்களின் மனதுக்கினிய மணத்

தையும், வாய்க்கு இதமான சுவையையும், உணர்ச்சி பொருந்திய ஐம்புலன்களில் உறுத்தத் தக்கதுமான சகல வித வைபவங்களையும் தேடிச் சென்றால் அதுவே பாபமாகின்றது.

இப்பாபத்திற்குக் காரணம் உடலில் இருக்கும் உள் மனமும் ஐப்பொறிகளுமே யாகையால் அச்செய்கைக்கு உடம்புதான் முதற்காரணமாகிறது. இவ்வாறன்றி மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களிடத்திலிருந்து உண்டாகும் ஸ்பரிசம், சுவை, உருவம், கந்தம், ஓசை ஆகிய ஐந்துவித ஆசைகளை வெறுத்து, ஐம்பொறிகளையும் அடக்கி தன்வழிப்படுத்தி, தானும் ஆத்மாவின் ஆஞ்ஞைக்கு உட்பட்டு அடங்கிவிட்டால் 'நான்' என்பவன் சோதியாகக் காணப்படுவான். அவ்வழியே பரஞ்சோதியைக் காணுதல் கூடும்.

அந்தப் பரம தெய்வீக வரப்பிரசாதத்திற்குப் பங்காளியாயிருக்கிறவன் செல்வத்தினால் செருக்குற்றுப் பூரிக்கவும், வறுமையினால் வாடி மெலிந்து சோர்வடையவுமாட்டான். அவன் நாவினால் புகலவொண்ணா அக்காந்திப் பிரபைகளால் மதி தெளிந்து ஆண்டவன் பாலிக்கும் அருள் கொடைகளின் முன், உலகம் கொடுக்கவும் எடுக்கவுங் கூடிய அனைத்தும் எவ்வளவோ இழிவுக்கும் நிந்தைக்கும் உரியதென்று நன்றாய்க் கண்டுகொள்வான்.

எனவே இவ்வாறான ஆத்மஜோதியாகிய பரம்சோதியின் தரிசனம் நமக்குச் சிந்திக்குமாறு அச்சோதிப் பிரம்மமாகிய இறைவனை அனைவரும் வேண்டிக்கொள்வோமாக.

**ஓம் தத் சத்!**

---

ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திலேதான் பரம்பொருளின் தோற்றமும் தன்மையும் பூரணமாய் வடிவெடுத்துப் பொலிகின்றன. ஆனால் மற்ற அவதாரங்களில் ஒரு பகுதி மட்டுமே தோற்றம் அளிக்கிறதென்று கூறப்படுகிறது. கிருஷ்ணாவதாரமே மக்களால் பெரிதும் விரும்பப்படுவது. பலர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. கண்ணனின் பெயரை அறியாத இந்துவைக் காண முடியாது.

—ஸ்ரீ கிருஷ்ணரின் யோகமுரசு

## "பெருங் கருணைப் பெருமான்"

# ஞானனந்தகிரி சுவாமிகள்

(ஸ்ரீ கே. சிவவடிவேல் உடையார்)

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது, பெரு நூல்களின் பேச்சு.

"உணர்ந்த ஞானியின் பொறிபட புணர்ந்த பாவமெல்லாம் போகுமே......!" என்பதும் ஆன்ற நூல்களின் அபிப்பிராயம்.

"ஜீவன் முக்தன்" என்பவன் காலங்கடந்த கணக்கறிவாளன் என்பார்கள்.

ஆயிரம் பிறவிகளுக்கு அப்பால் பிறப்பவன் "மனிதன்" என்றும், பல்லாயிரம் பிறவிகளுக்குப்பின்னே பிறப்பவன் "மனிதனிற் புனிதன்" என்றும் அனந்தகோடி பிறவிகளுக்கு அப்பாற் பிறப்பவனே, "முற்றத் துறந்த முனி புங்கவன்" என்றும் தத்துவம் உணர்ந்த சகச நிட்டையுடையவர்கள் கூறும் அற்புதக் கூற்றுரும்

அந்த வரிசையில் வந்த ஓர் மகத்தான சுகசொரூபிதான் நம்முடைய தபோவனம் பரமஹம்ஸ ஞானனந்தகிரி சுவாமிகள் ஆவார்கள்.

கன்னட நாட்டை ஒட்டிய "மங்களபுரி" என்னும் சுபீட்ச மான ஊரில் தோன்றியதாகத் தெரிகின்றது.

"மங்களம்" என்ற சொல்லுக்கே, அழியாநிலை அருள்வது என்பது பொருளாகும். என்றென்றும் ஜீவ சக்தியோடு திருவிளையாடல் களை மேற்கொண்டிருப்பதற்குத்தான் "மங்களம்" என்று சொல்லு வார்கள் எனவே, மங்களபுரியில் தோன்றிய மகானுக்கு மரணபய மில்லை என்பது பொருளாகின்றது.

"கிரி" என்ற சொல்லுக்கு அசையாமல் இருக்கும் "அசலம்" என்பது பொருளல்லவா? அந்த நிலையில் நமது ஞானனந்தகிரி சுவாமிகள் என்றும், 'எதற்கும்' எங்கும் எப்பொழுதும், எவ்வாற்றுனும் சற்றேனும் அசையாதிருந்தவர்கள் என ஆகின்றுர்கள்.

அறிவிற் சிறந்த ஔவைப்பிராட்டியார், அதிகமான் தந்த, அருநெல்லியாகிய கருநெல்லிக்கனியினுல், முந்நூறு ஆண்டுகளுக்குமேல் முதுமையிலும் புதுமையோடு விளங்கினுர்கள் என்பது வரலாறு கண்ட வாய்மை.

அஃதே போல் நமது சுவாமிகளும், அநேக நூற்றாண்டுகளைக் கண்டவர்களாக நாம் அறிகின்றோம்.

ஏன்? சென்ற நூற்றுண்டிலே விளங்கிய, ''வடலூரடிகள்'' என்னும் இராமலிங்கப்பெருமானோடு நீண்டகாலம் நெருங்கிப் பழகியிருந்ததாகச் சுவாமிகளின் திருவாக்கினாலேயே தெளிவுறச் சொல்ல நாம் செவிமடுத்திருக்கின்றோம். மற்றும், மறைந்த மாமேதைகள் மகா முனிபுங்கவர்கள், பரம சாதுக்கள் பலரைச் சுவாமிகள் பார்த்தும், பழகியும் இருக்கின்றார்கள்.

பற்பல நாடுகளில், பற்பல ஆண்டுகள் தங்கியிருந்து, தவம் புரிந்திருக்கின்றார்கள்.

குறிப்பாகச் சொல்லப்போனால் தஞ்சையம்பதியில் சரபோஜி மகாராஜா காலத்தில் சரஸ்வதி மகாலில் உள்ள சாஸ்திரங்களை ஆராய்ந்து வைத்திய சம்பந்தமான அரும் பெரும் ஏடுகளை எழுதிக் கொடுத்திருக்கின்றார்கள். அக்காலத்தில் உருவாக்கப்பெற்ற சுவாமிகளின் அருமையான திருவுருவப்படம் ஒன்றும் இன்றும் அங்கு காட்சியளிக்கக் காண்கின்றோம்.

சுவாமிகள் ஆதிசங்கரர் பரம்பரையில் தோன்றி, காஷ்மீரைச் சார்ந்த ஸ்ரீநகர், ஜோதிர் மடத்துப் பீடாதிபதியாய் பதின் மூன்றாண்டுகள், அருளாட்சி புரிந்திருந்ததாகத் தக்க சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

இமயம் முதல் குமரி வரை பாத யாத்திரை செய்ததன்றி, பர்மா, சிலோன் முதலிய பல இடங்களிலும் சுவாமிகள் பல காலம் இருந்ததாகத் தெரிகிறது.

அயல்நாடுகளிலிருந்து அநேகர்வந்து அருள்பெற்றதுண்டு. அந்தந்த நாடுகளில் உள்ள கோவில்களைப்பற்றியும், விருட்சங்களைப்பற்றியும், குறிப்புரைத்து அடையாளங்களையும் காண்பித்து அகமகிழச்செய்வார்கள்.

மேல்நிலையில் தட்டுக்கெட்டு தடுமாறி வருகின்றவர்களுக்குத் தக்க வழிகாட்டி, சாந்திநிலையளிப்பது சுவாமிகளின் பெருங்கருணைக்கு ஓர் பேரெடுத்துக் காட்டாகும்.

பெருந்தவங் கிடந்து சுவாமிகளைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்களின் பெயர்கள், ''சக்குபாய் அம்மையார் என்றும், வெங்கோப கனபாடிகள்'' என்றும் தெரிகிறது.

சமரச நிலையினை விமரிசையாகக் கடைப்பிடித்தவர்கள் நமது சுவாமிகள். ''எம்மதமும் சம்மதம்'' என்னும் கொள்கையுடையவர்கள். இந்து முஸ்லிம், கிருத்துவ வேதங்களை மிக நன்ருக உணர்ந்தவர்கள்.

பெருஞ்சோற்றுப்படைப்பில் பிரியமுடையவர்கள். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல், எல்லோருக்கும் அன்னம் படைப்பதில் முன்னவராக இருந்தார்கள் நமது சுவாமிகள்.

சேலத்தைச் சார்ந்த ஆட்டையாம்பட்டி, கல்லக்குடி ஆகிய பல இடங்களில் முறையே ஒவ்வோர் இடங்களிலும் பன்னிரண்டாண்டுகள் தங்கியிருந்து இறுதியில் சித்திலிங்க மடத்திலும், வந்திருந்த செய்தி நாடறிந்த ஒன்ருகும்.

சுவாமிகளின் இயற்பெயர் ''சுப்பிரமணியம்'' எனச் சொல்ல கேட்கின்ருேம். அன்பு, அருள், கருணை என்ற சொற்களுக்கெல்லாம் ஆதார புருஷராய் விளங்கியவர்கள் நமது சுவாமிகள்

ஆகாத காரியங்களைச் செய்தவர்களையும், மா காதலுடன் மருவி, அணைத்துச் செல்வது நமது ம்கானிடத்து நேரில் கண்டு மறுக்க முடியாத உண்மையாகும்.

உடற் பிணியுடன், உயிர்ப்பிணிகளையும் ஒருங்கே தீர்த்துவைத்தார்கள் மனப்பிணி தீர்ந்து மகிழ்ச்சியுடன் சென்றவர்கள் பலபேர்.

கதிர்காமத்தில் உள்ள கந்தப்பெருமானைத் தனது வசப்படுத்திக் கொண்டு வந்துவிட்டார்கள் என்றெல்லாம் சுவாமிகளின் ஆத்மீக காந்த சக்தியைப்பற்றிச் சொல்வதுண்டு.

சுவாமிகளின் புன்னகை ஒன்றே பல்கோடி பொன்னகை பெறும் என்றும் சாந்தி நிலை சந்தோஷமளிக்கும் என்றும், முகத்தைப் பார்த்தாலே நமது அகத்தில் உள்ள அவலமெல்லாம் அசன்று விடுமென்றும், அனுபவித்தவர்கள் கூறுவார்கள். ''பார்த்தால் பசிபோம்'' என்னும் பழமொழி அங்கு நிதர்சனமாகும்,

குழந்தை உள்ளம் குரு ஸ்தானத்திற்குரிய பெருங்குணம். கடவுள் தன்மை வாக்கு வல்லபம், வசீகரத்தோற்றம் முற்றிய நிலையில் ''வெற்றி'' என்றசொல் வெளி வருகின்றபோது சுவாமிகளின் தெய்வீக சக்தி மிகச் சிறப்பாக வெளிப்படும்.

சுத்த தத்துவ சித்தர்கள் வரிசையில் வந்த சுவாமிகள். இறுதியில், 1974ம் ஆண்டில், வள்ளலார் மறைந்த சரியான நூருவது

# ஆலய வழிபாடும் அதன் நோக்கமும்

(க. குருநாதன் அவர்கள்)

ஆன்மா இறைவனோடு லயிக்க உதவும் இடம் ஆலயம் எனப்படும். ஆ+லயம் எனப் பகுத்துப் பொருள் கொள்வோமாகில் அதன் கருத்து எளிதிற் புலனாகும். உயிர்த் தொகுதியனைத்திலும் மனித வர்க்கம் மிக மேம்பாடடைந்தது. பகுத்தறிவும் உள்ளுணர்வும்கொண்டு பதியை (இறைவனை) உணரும் தன்மையும் இவ்வர்க்கத்திற்கே சிறப்பாக உள்ளதையும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. எனினும் மக்களாகப் பிறந்துள்ளவர்கள் யாவரும் இந்நெறிவழிச் செல்லுகிறார்களோ என்பது கேள்விக்குரிய விடயம். எனினும் பெரும்பாலானோர் ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி அகில உலகையும் உயிர்களையும் படைத்துக் காத்து அழித்து இயக்கி வருகிறதென்பதை அநேகமாக ஒப்புக்கொள்கின்றனர். இவ்விதமான சக்தியையே பல சமயக் கோட்பாடுடையவர்களும், தேசத்தவர்களும் பலவிதமான பெயரிட்டு அழைக்கின்றார்கள். வேதாந்திகள் பரப்பிரம்மம் என்றும்; சைவசமயிகள் சிவன், பரமேஸ்வரன் என்றும்; வைஷ்ணவர்கள் நாராயணனென்றும் இன்னும் ஏனைய சமயத்தவர்களான முஸ்லீம்கள், யூதர்கள் முறையே அல்லாவென்றும்; ஜெஹோவா என்றும் பலவிதமாகக் கூறுகின்றார்கள் இன்னும் புத்தசமயம் கிறீஸ்து சமயம் ஆகியவற்றைக் கைக்கொள்பவர்கள் முறையே புத்தரையும், யேசுக் கிறீஸ்துநாதரையும் வழிபடும் வழக்கத்தையும் அவர்கள் காட்டிச் சென்ற கோட்பாடுகளின் படியும் நடப்பவர்களாகின்றார்கள். கடவுள் நம்பிக்கை என்ற ஒன்றில்லாத நாஸ்திகர்களை விட்டு மற்றவர்கள் யாவரும் கடவுள் வழிபாடு இயற்றியே வருகின்றார்கள். இன்னும் நாஸ்திகர்களும் ஒருவகையில் இயற்

---

முற்பக்கத் தொடர்ச்சி — —

ஆண்டில் ஜீவ சமாதி அடைந்து, தேவநிலையில் சிறப்புற்று விளங்குகின்றார்கள்.

ஞானமும், ஆனந்தமும் நிறைந்த ஞானானந்த சுவாமிகளின் திருவருட் பெருங்கருணையினால், நம் நாடும் நம்முடைய வீடும் நலம் பெறுவதாக! வாழ்க வையகம் பெருங்கருணைப் பெருமானின் மெய்ப்புகழ் மேவுக.

கையை வழிபட்டு வருகிறார்கள் எனவும் கூறலாம். இவ்வித வேறுபாடுகள் உலகில் எக்காலத்திலும் எப்பொழுதும் இருந்தே வருகின்றன. இன்னும் இருந்துவருகின்றது. இனிமேலும் இருக்கும் என்பதை ஆன்மாக்களின் மூவகை வேறுபாட்டின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

சைவசித்தாந்தம் ஆன்மாவை பாசம் என்றும் தளை பிணித்துக் கொண்டிருப்பதால் ஆன்மா பதியாகிய இறைவனை அறிய முடியாமல் அஞ்ஞான இருளில் அழுந்திக் கொண்டிருக்கிறதென்றும் வீடுபேறோ விடுதலையாகிய முத்தியையோ அடைய முடியாமல் ஜனன மரணச் சூழலில் சிக்கித் தவிக்கிறதெனவும் சான்றுபகரும். மூன்று வித ஆன்மாக்களை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலங்களின் சேர்க்கையின் வேறுபாட்டைக் கொண்டு பகுப்பதோடு அவர்களுக்கு இறையருள் எப்படிக் கிட்டுகிறதென்பதையும் சைவ சமய ஞானிகள் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். மும்மலங்களுடன் கூடிய சகலருக்கு குரு ரூபமாகவும், மாயை நீங்கியவர்கட்கு வழிபடு உருவமூர்த்தியாகவும், இன்னும் மாயையும் கன்மமும் தங்கியவர்கட்கு அருவமாகவும் நின்று அருள்புரிவதாகவும் சொல்வார்கள்.

சாதாரண மக்கள் யாவரும் உலகியலில் உழன்று லௌகிக வாழ்க்கையையே பெரிதெனக்கொண்டு பரமார்த்திகப் பெருவாழ்வில் நாட்டம் இல்லாது வறிதே காலம் கழிப்பர். அவர்கள் மக்கள் நிலையில் இருப்பினும் மாக்களின் படித்தரத்திற்கும் இறங்கி விலங்கினங்களுக்கொப்ப ஜீவிப்பதற்கும் தயங்கார்கள். இவ்வித குறைபாடு தோன்றக் காரணம் சித்தசுத்தி இல்லாமையும் இறை நம்பிக்கை இல்லாமையுமேயாகும். மேலும் மும்மல அழுக்கானது செம்பிற்களிம்பு போல் உயிர்த்தத்துவத்தை பிணித்திருக்கும்பொழுது யான் எனது என்னு மமகாரம் விகார ரூபமெடுத்து ஜீவனை தீவினைகளைச் செய்வதற்குத் தூண்டுகிறது. இவைகளை நீக்குவதற்கு பகவத் நாமத்தை ஜெபித்தல், இறைவனின் கல்யாண குணங்களை சிந்தனை செய்தல், அவன் புகழ் பாடுதல், கேட்டல் ஆகியனவும் அவன் பாதார விந்தங்களை சேவிக்கும் விருப்பம் ஆர்வம் ஆகியன பெரும் பலனளிக்க வல்லன. இந்த இடத்தில் கோவில்கள் மக்களுக்குத் துணைபுரிபவையாகின்றன. வழிபடப்படும் மூர்த்திகளுள் பேதமிருப்பினும் பெறப்படும் பலன் திருவருளைப் பெறலாகிய ஒன்றேயாகும். இவ்வுலக

வாழ்க்கைக்கு வேண்டியனவாயிருந்தாலென்ன முக்திநிலையை அடைவதற்குரிய சரியை, கிரியை, யோக, ஞான சாதனைகளாயிலென்ன இவைகளை ஓர் ஆலயத்தில் மன ஒருமைப்பட்டு வேண்டுதல் செய்வது சுலபமானது. இதையொட்டியே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும், 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா'மென்ற வழக்கமுள்ள உரைகளும் எம்மத்தியில் நிலவி வருகின்றன. இன்னும் பின்வரும் தேவாரப் பதிகத்தின் மூலமும் இவ்வுண்மையை நன்கு உணரமுடிகிறது.

"திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்
ஒருநாளும் திருக்கோவில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே"

இன்னும் சிலர் ஒரு வினாவை இக்காலத்தில் அநேகமாக ஆலய வழிபாடு பற்றி எழுப்புவதையும் நாம் கேட்டு வருகிறோம். அதாவது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றிருக்கும்பொழுதும்; 'அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற பரம்பொருள் நிறைந்திருக்கும்' பொழுதும் கோவிலுக்குச் சென்றுதானா வழிபாடு இயற்றவேண்டும் என்பதே அவ்வினாவாகும்.

இதற்கு விடையாக அநேகமாக இரண்டொரு உதாரணங்களை எடுத்துச் சொல்வார்கள். அவைகளை இங்கு குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். முதலாவதாக நாம் பசுவொன்றிலிருந்து பால் எடுக்க விரும்புவதாக வைத்துக்கொள்வோம். அப்படிப் பெறுவதற்கு அதன்மடியை முலைக்காம்பை வருடினால்தான் பாலைப்பெற முடியும். அதன் அங்கத்திலே வேறு பகுதியிலிருந்து எடுக்க முயன்றால் அம்முயற்சி அனர்த்தமாகும். அடுத்த உதாரணம்: நாம் இப்பொழுது மின்சார வசதியுள்ள இடங்களில் இருந்து வருகிறோம். நாகரீக முன்னேற்றமான காலத்தில் வாழ்ந்து வருகிறோம். மின்சாரத்தை பலவேறுவிதமான கருமங்களை ஆற்றுவதற்கு ஒளியுண்டாக்குவதற்கு, அடுப்பில் சூடுண்டாக்குவதற்கு, துணிகளை துவைப்பதற்கு, வானொலியில் ஒலியுண்டாக்குவதற்கு, இப்படி இன்னும் பலவித ஆற்றல்களாக உபயோகிக்கிறோம். இந்த மின்சாரத்தைக் கடத்திச் செல்வதற்குச்

செப்புக்கம்பிகள் பாவிக்கப்படுகின்றது. இப்படியாக பல இடங்கட்கும் மின்சாரம் கொண்டு செல்லப்படினும் அதன் ஆற்றலும் உற்பத்தியும் ஒரு நிலையத்தில்தான் தோன்ற முடியும்.

இவ்விதமே நம்முன்னோர்களும் ஆலயத்தைப்பற்றியும் ஒரு பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வந்திருக்கின்றனர். மக்களை நன்னெறிப்படுத்தக் கூடியதும் உய்தி அடையச் செய்யக்கூடியதுமான அவ்வழிகளை வாழையடி வாழையாக நாமும் பின்பற்ற வேண்டியதே. பொதுவாக ஆலய வழிபாட்டைப் பற்றி மேலே கூறப்பட்டது. இனி அதன் நோக்கத்தை சிறிது விரிவாக ஆராய்ந்து பார்த்தல் நல்லது.

மனித இனம் லௌகிக வாழ்க்கையில் நாட்டம் உள்ள தென்பது முன்னர் கூறப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் உயிர்த்தத்துவமான ஆன்மாவானது பொறிகள் புலன்கள் ஆகியவற்றிற்குப் பிரதான இடம் கொடுத்து தேகத்தைத்தான் என்று கருதுவதாலே தான் இந்நிலை ஏற்படுகின்றது. இந்த ஆத்மாவிற்கு ஆதாரமாக உள்ளொளி பெருக்கும் இறைவனே மெய்ப்பொருளோ ஒன்றுண்டு என்ற பேருண்மை எட்டாத நிலையை உண்டாக்கும் மயக்கத்தைத் தோற்றுவிக்கிறது. இந்நிலையைப் போக்குவதற்கும் இறையருள் தேவை. இதைத் தித்திக்கும் திருவாசகம் தந்த மணிவாசகர்

"மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு" என்றும்

"அவனருளாலே அவன் தாள் வணங்கி"

"கூர்த்த மெஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"

என்றும்

பலவாறு பல்வேறு இடங்களில் சிவபுராணத்தில் அருளிச் செய்திருக்கின்றார். இத்தகைய புலனடக்கத்தை கோவில்களில் நாம் மிக எளிதாக அனுட்டிக்கலாம். ஐம்பொறிகளையும் அவைகளின் இஷ்டப்படி உலக சுகானுபவங்களில் மித மீறித் திளைக்க விடாமல் ஒரு கட்டுக் கோப்பிற்குள் கொண்டு வருவதற்கு இறை வழிபாடு உறுதுணை பயப்பதாகும். புலன்களை ஆன்ம ஆணைக்குள் இயங்கச் செய்

வதன் சிரமத்தை கீதாசாரியனுனபகவான் ஸ்ரீகிருஷ்ணரும் கீதோப தேசத்தில் அருச்சுனனுக்கு எடுத்துக் கூறியிருக்கின்ருர். இன்னும் மனம் வாக்கு காயம் ஆகியன திரி கரணசுத்தியுடன் இறைவழிபாட்டில் ஒன்றி நின்ருல் இறையருள் மிக எளிதில் கிட்டுமென்பதை பின்வரும் திருமந்திரமும் சான்றுரைக்கின்றது.

"தானே புலனைந்தும் தன் வசம் ஆயிடும்
தானே புலனைந்தும் தன் வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான் தனைச் சந்தித்தே''
(திருமந்திரம்)

ஆன்மாவானது புறப்பற்றுக்களையெல்லாம் நீக்கி ஞான குருவாகிய இறைவனைப் பற்றி நிற்குமாகில் வஞ்சப் புலன்களைந்தும் செயலிழந்து நிற்கும். புலன்கள் யாவும் கட்டுக்கடங்கி குதிரையைப் போன்று ஆன்ம ஆணைக்குள் அடங்கி நடக்கும். அப்பொழுது ஆன்மப் பிரகாசம் சித்திக்கும். இத்தகைய பேரின்ப நிலையை நாம் எளிதில் பெற ஆலய வழிபாடு பெரிதும் உதவுகிறது.

---

# இறைவன்

இறைவா! நீ சகலத்தையும் செய்ய வல்லவன்; உன் தன்மை அளப்பரியது. அகிலமெல்லாம் உன் படைப்பு. பல் வகை முறைகளால் பல்வகைப்படைப்புகளை நீஉருவாக்கினுய். சிருஷ்டி ரகசியம் உனக்கு மட்டுமே தெரியும். எதுவும் உன் திருவிளையாடலே.

\+ \+

உனக்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன. இவைகளில் ஒன்றுகூட உன்னுடையதல்ல. உனக்கு ஆயிரம் மூர்த்தங்கள், ஒன்றுகூட உனதல்ல. ஆயிரம் புனித பாதங்கள் கொண்டனை. எனினும் ஒன்றுகூட உனக்கு இல்லை. ஆயிரம் புலன்களைப் பெற்றிருந்தும், ஒன்றுகூட உனக்குத் தேவையில்லை. உன் இவ்வதிசய சக்தி என்னை ஆட்கொண்டது. எல்லாப் பொருள்களிலும் அடங்கியிருக்கும் சோதி அந்த இறைவனே. அவனது சோதியால்தான் உலகம் ஒளிர்கிறது.

—குருநானக்

# பிரளய நடனம்

(கோமதி ராஜாங்கம்)

ஜடைகள் விரிந்து அசைகின்றன. ஆடல் வேகம் அதிகரிக்கும்போது நீண்ட ஜடைகள் சாட்டையினுல் அடிப்பது போல் நக்ஷத்ர மண்டலத்தில் அடித்து அவை பொல பொல என உதிருகின்றன. ஒவ்வொரு ஜடையின் கசை அடியும் ஒவ்வொரு அண்டத்தைச் சின்ன பின்னப் படுத்துகின்றன.

த்ரிசூலம் பிடித்த கை உயரே தூக்கியிருக்கிறது. அதன் முனையே காசிப்பட்கொத்தை, ஏன் உலகையே தாங்குகிறது. தலையில் உள்ள கங்கை வெள்ளம் பெருக்கெடுத்து நான்கு பக்கங்களிலும் பாய்கிறது. திக்கு திசை தெரியவில்லை சூர்ய சந்திரர்கள் எங்கோ ஓடி மறைந்தார்கள்.

மூன்றும் கண்ணிலிருந்து நெருப்பு ஜ்வாலைகள் சிதறுகின்றன. அவைகள் பிறையை ஊழித்தீயாக நான்கு பக்கங்களையும் நாக்குகளை நீட்டி நீட்டி தசிக்கிறது நிருத்தம் செய்யும் கால்களுக்கிடையில் பூமி எப்பொழுதோ பொடிப் பொடியாய் விட்டது. அதில் நின்று எழுந்த தூளிகள் எப்பொழுதோ சாம்பாராகிக் கங்கை நீரில் கரைந்தாயிற்று. வெள்ளத்துக்கும் தீக்கும் போட்டி. ஒருபக்கம் தீ அணைகிறது. மறுபக்கம் ஜலம் கொதிக்கிறது.

வேகமா அது! ஊழிக்கூத்தே உருக்கொண்டல்லவா ஆடுகிறது. அண்டங்கள் காற்றுடியாகப் பறந்து வெள்ளத்தில் மிதக்கின்றன. அல்லது தீயில் வெந்து சாம்பராகின்றன. மகாப்ரளயத்தின் யஜமானன். ஆட்டமா? அது; உலக முடிவில் மகாப்ரளய சமயத்தில் இவ்வாறு ஊழிக்கூத்தாடுகிறுன் பரமன் என்று யார் கூறுவது? இல்லை. இல்லை. இந்நடனம் எப்பொழுதும் நிரந்தரமாக நடந்து கொண்டே இருக்கிறது. நீ பார்ப்பதில்லை. உனக்கு பயம் மனிதா? இது உனது துரதிருஷ்டமே.

பிரளயம் ஊழி முடிவில் தான் நடக்கிறது மற்ற சமயங்களில் அவன் சமாதி நிலையில் இருக்கிறுன். என்று யார் கூறியது? ஏ! மனிதா? உனது நான்கு பக்கங்களிலும் கண்களை ஓட்டிப்பார். சிருஷ்ட்டி கர்த்தா உன்னை எப்பொழுதும் புத்துயிரளித்துப் பாதுகாத்து வருவதைப் போல ப்ரளயநடனம் ஆடி ஆடி உன்னை அழிப்பதை ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கிருய்?

வாழ்வின் ஒவ்வொரு விநாடியையும் மரணம் விழுங்குகிறது. துளி துளியாக ஜீவன் அழிகிறது. அணு அணுவாகச் சிதைகிறது. உயிர்

உருண்டு உருண்டோடி நேராக மரணத்தின் வாயில் விழுகிறது. அந்தோ! இது உனக்குக் கண் இருந்தும் தெரியவில்லையே.

கர்வம் அகங்காரம் மோகம் மமதை. ஐயோ, ஐயோ, யார் மேல்? எதற்காக நீ இந்தப்பரந்த உலகில் எம்மட்டு? நீ உலகில் மகத்தான வன். கொண்டாடப்படுகிறவன் என்று எண்ணுகிறாய், அப்படியே இருக் கட்டுமே. ஆனால் சூர்யமண்டலத்தினால் ஆளப்படும் இப்பிருமாண்டங் களில் பூமி எம்மாத்ரம்? தேவமார்க்கத்தில் செல்லும் இப்பூமியின் சூர்யன் மற்ற பிருமாண்டங்களின் சூர்யர்களுடன் ஒப்பிடும்போது உனது சூர்யன் அங்கு உனது கால்பந்தின் பிரமாணம் கூட இல்லை. குழந்தை களின் விளையாட்டுக் கைப்பந்தே நீ எங்கே? நீ எதில் நிற்கிறாய்? உனது கர்வம் எங்கே?

நடராஜன் ஊழிக்கூத்தாடுகிறான். நீ அந்த நடனின் ஆட்டத்தைப் பார்க்கிறாயா? ஊஸ்? ஹூஸ்? எங்கு பார்க்கிறாய் நீ? பயம் பயம் பயம். அபாக்கியனே இது உனது துரதிருஷ்டம். நீ அந்நடனத்தை ஒருதரம் கண்டு விட்டாயானால் உனது கர்வமும் போலி அகங்காரமும் இறு மாப்பும் பொடிப் பொடியாகி விடும். கர்வமாகிய பனிமலை உருகிப்போய் விடும்.

சிவபிரானின் சரீரத்தில் விபூதி பூசப்பட்டிருக்கிறது. சிவம் என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? மங்களம் என்று அர்த்தம். உனக்கு மங்களம் உண்டாக வேண்டுமா? வேண்டாமா? வேண்டுமானால் உன்னை அலங்கரித்துக்கொள்ள விபூதி உனதருகில் தயாராக இருக்கிறது. பூசு வதற்கு அவனும் தயாராக இருக்கிறான். அவன் சாதாரண பஸ்மமா பூசுவான், அவன் சிதையிலிருந்து சுடச் சுட எடுத்த பஸ்மம் அல்லவா பூசுவான். இந்தப் பூர்ணபடைப்பை எரித்து அதன் மேல் நடனமாடுகிறான். அச்சாம்பல் உனக்கு அலங்காரப் பூச்சாக வேண்டும்.

பகவத் சிருஷ்டியில் மகாப்ரளயம் எப்பொழுது ஆகும் இந்தக் கணக்கு நீ போடவேண்டாம். நீ உன் பாட்டுக்கு இந்தச் சின்ன உல கைச் சிலந்தி போல் உன்னைச் சுற்றிச் சுற்றி நியமித்துக் கொண்டிருக் கிறாய். அது பாட்டுக்கு இருக்கட்டும். இந்தச் சிவன் வந்து இந்த பஸ் மத்தைப் பூசி என்னை அலங்கரிக்கட்டுமே என்கிறாய். என் அப்பனே அதுதான் முடியாது. உனக்கு மங்களம் வேண்டுமானால் சுபமான திரு நீறு அணிந்து நீ சிவபக்தனாக வேண்டும். அந்த ஊழிக்கூத்தனை அழை. உன்னைச் சுற்றி உள்ள இப்பொய்யான உலகை எரித்துச் சாம்ப லாக்கு. உனக்குத் திறம் இல்லை என்றால் அந்த ஸம்ஹாரத்தேவனை உருகி உருகி அழை.

அப்பனே. வா. வா. ப்ரளயதேவா மகாதேவா. வருவாய் வருவாய் என் உலக விவேகத்தை, மகாமாயாமோக பாசத்தை அழுகி நுர்க்கந்தம்

வீசும் இர்த சர்வ அகங்காரத்தை சிதையிலிட்டு பஸ்மமாக்கு என் அப்பனே. மகாருத்ரனே. உனது வரவு நல்வரவாகுக. உனது நெற்றிக் கண்ணைத் திறந்து என்னைச் சிறிது பார். பிரளய ஜ்வாலையைச் சற்று என் மேல் வீசு. நான் எனது என்ற மோகப் பாசத்தைச் சுட்டெரித்து சாம்பராக்கு. ஹே மகாதேவா. வா வா உத்தண்ட தாண்டவத்தினால் ஆகாயத்தையும் பூமியையும் த்வம்ஸம் செய்து கொண்டு ஆடு. அகம் எனும் ஆதாரத்தை முற்றிலும் தூளாக்கிவிடு. உனது காலடி ஓசையைக் கேட்க என் மனம் தவியாகத் தவிக்கிறது. எனது உயிர் உன்னை அழைக்கிறது பரஞ்சோதியே வருவாய்.

உன்னால் இப்படி அழைக்க முடியுமா? முடிந்தால் உனது பாக்கியம் உனக்கு நல்வரவு கூறும். நடராஜனின் இந்த ஊழிக்கூத்தைக் கற்பனைக் கண்கொண்டாகிலும் பார்த்தாயானால் நீயோ பாக்யசாலி. உனக்கு பயமாக இருக்கிறதா? எதற்கு? யாருடைய நாசத்தின் பொருட்டு பயமாக இருக்கிறது. நீ அமிருத புத்ரனடா: ஊழிக்கூத்தனின் குமாரனடா; பிரளயாக்கினி உன் சரீரத்தின் உஷ்ணமாயிற்றே. பிரளய வெள்ளம் உனக்குக் காலலம்பக்கூடக் காணாதேடா. நீ பயப்படுகிறாயா?

நாம் எல்லாரும் சிவபிரானின் குழந்தைகள். நீ இதை மறந்தாய். பிதா குழந்தையை தோளில் தூக்கிக்கொண்டு ஆடி விளையாட்டுக் காட்டுகிறார். பிள்ளை கைகொட்டிச் சிரிக்க வல்லவா வேண்டும்.

காட்டுத் தீ பரவுகிறது. செடி கொடி புதர்கள் எல்லாம் எரிகின்றன. அவைகள் நீறாகப்போன இடத்தில் பயிரிடுகிறார்கள். உயிரூட்டும் தானியங்கள் அதில் பயிராகின்றன. ஆகவே அழிவு நாசம் என்பது புது ஜீவனை உயிர்ப்பிக்க முன்னேற்பாடு.

ஒரு பழைய காலத்து கட்டிடம். ஒருநாள் ஒரு இஞ்சினியர் அங்கு வருகிறார். ‘அவர் ஒரு கல்லை உருவுகிறார்’ பொல பொல வென்று பத்து செங்கற்கள் உதிருகின்றன. அடிவாரத்திலிருந்து சுண்ணாம்பு கட்டி கட்டியாகப் பெயர்ந்து உதிருகிறது. இஞ்சினியர் இதைக்கூர்ந்து கவனிக்கிறார். பிறகு அடிக்கடி இங்கு வருகிறார். ஒரு சமயம் முன்புறம் ஒரு சமயம் பின்புறம் ஒரு சமயம் பக்கவாட்டில் இப்படி ரிப்பேர் செய்யச் சொல்லிவிட்டுப் போகிறார். அதை வீட்டுக்காரர் கருத்தாக நிறைவேற்றுகிறார். பழைய துணி கிழிசலைத் தைப்பதுபோல் இந்த வேலை கொஞ்சக் காலம் நடக்கிறது. நாலைந்து வருஷங்கள் கழித்து கூலியாள்கள் கூட்டமாக வருகிறார்கள். இஞ்சினியர் அவர்களை அனுப்பியிருந்தார். கொத்தன் ஒரு இடத்தில் கடப்பாறையைச் சொருகிவிடவே அச்சுவரே விழுந்து விட்டது. இஞ்சினியர் கெட்டவர், அவர் வேலையே அழிப்பது என்று வீட்டுக்காரர் கூறுகிறாரா?

இல்லை தம்பி. இஞ்சினியர் வேலை புத்துயிரளிப்பது. அவர் கையில் புதுக் கட்டிடத்தின் ப்ளூபிரின்ட் இருக்கிறது. இப்பொழுது அந்த பழைய கட்டிடம் மராமத்துச் செய்யவும் லாயக்கில்லாமல் போய்விட்டது. இந்த அழிவு புது மாளிகைக்கு அஸ்திவாரமாக அமைகிறது.

புது சிருஷ்டிக்குப் பிரளயம் இன்றியமையாதது. ஜீர்ணமாகி நோயினுல் நலிந்த சரீரத்தை எடுத்துக்கொண்டு காலதேவன் புதிய இளம் சரீரத்தைப் படைக்கிறுன். சிருஷ்டியில் அழிவு கட்டாயம் வேண்டியதே. பிரகிருதி நிமிஷத்துக்கொருதரம் மாறும் தன்மையுள்ளது. புதியன புகுவதும் பழயன அழிவதும் புத்துயிரளிக்க ஒரு ஸாதனம், இதைச் செய்யும் இஞ்சினியரே சிவபிரான்.

மிகவும் பயங்கரமானவன். உக்ரஸ்வரூபம். காலதேவதை. ஆனுல் அவன் உள்ளம் எத்தனை கருணை நிரம்பியது. தெரியுமா? அவன் கையில் பிடிபட்டால் அவன் மடியில் உட்கார வேண்டுமென்ற நம் ஆத்திரத்தை பிரகிருதி மாதா தடுக்கிறுன். நீங்கள் பிரயாணக் களைப்பில் மரத்துக்கு மரம் பிடித்துக் கொண்டு உட்காருகிறீர்கள். ஆனுல் வலுவில் வந்து உங்கள் கைபிடித்து சீக்கிரமாக வழி நடக்க உதவுபவனை நிஷ்டூரன் என்றும் கொடுங்காலன் என்றும் குறை கூறுகிறீர்கள். ஆனுல் அவன் தாயக்கு இருப்பிடம்.

பிள்ளைப் பிராயம் இறக்காவிட்டால் உங்களால் வாலிபனுக ஆக முடியுமா? வாலிபம் மரிக்காவிட்டால் யௌவனம் எங்கிருந்து வரும்? யௌவனம் போனுல் முதிர்ச்சியடைந்த வயோதிகம். ஆனுல் அந்தப் பருவத்தின் அறிவும் மேதையும் அனுபவமும் நமக்குக் கிட்டுமா? சகிப்புத் தன்மையும் ஆராய்ச்சியும் முதுமைப்பருவம் அல்லவா நமக்கு அளிக்கிறது? இதைப்போய் திட்டுகிறீர்களே. இப்படி நீங்கள் எதர்க்கெடுத்தாலும் திருப்தி இல்லாமல் இருப்பதைப் பார்த்து மகாதேவன் திரும்பவும் உங்களைக் குழந்தையாக்கி விடுகிறுன்.

இதெல்லாம் காலதேவனுடைய விளையாட்டு. அவனது பொழுது போக்கு. குழந்தைகளுக்கு விளையாட்டு சாமான்கள் அளிக்கிறுன். அவைகள் உடைந்து விடுகின்றன. குழந்தைகள் தூர எறிந்து விடுகின்றன. அவைகள் மறுபடியும் அழ ஆரம்பிக்கவே தகப்பன் புது விளையாட்டுப் பொருள்களைத் தருகிறுன்.

நீங்கள் வயோதிகத்தால் தள்ளாடும் சரீரத்தைப் பார்த்து அழுகிறீர்கள். உடன் காலதேவன் அதை எடுத்துக்கொள்ளுகிறுன். பிறகு குழந்தை உடலை கொடுக்கிறுன். இந்த பூரண உலகு சிதிலமடையும் போது அதை அழித்து அதன் தடத்தில் புது உலகமைக்கிறுன்

ஐயோ. சுவாமி, எந்தையே. நீ இந்தக் காற்றடைத்த தோல் பாண்டத்தை வைத்து வை. அல்லது எடுத்துக் கொள். எனக்கு உனது சரணகமலங்களைக் கொடு. உனது கரங்கள் ஒரு தேகத்தை அழிக்கிறதோ, அல்லது அண்டத்தையே அழிக்கிறதோ, அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இவைகளில் ஒரு பாண்டமும் எனக்கு வேண்டாம். னக்கு உனது கரங்களின் அன்பு அரவணைப்பு வேண்டும். நீ உனது தண் என்ற கரங்களை எனது தலைமேல் வைப்பாய் அப்பா.

நீ ஊழிக்கூத்தன். உனது தாண்டவத்தினால் அண்டசராசரங்கள் அதிருகின்றன. நான் ஆனால் உனது சிவந்த தளிர்ப் பாதங்கள் ஆடுவதையே காண விரும்புகிறேன். உனது கால்களைக் காணும் பாக்கியம் எனக்குக் கொடு.

நோயும் பிணியும் துக்கமும் சாவும் மூப்பும் பிரேதமும் பூதமும் உனது வேலைக்காரக் கூட்டங்களாக இருக்கலாம். நான் அறியேன். உனது அடிமைகளும் அதிகாரிகளும் உனது புத்ரனை வெகுமானிக்க மாட்டார்களா? அவனைப் பயமுறுத்தும் துணிவு அவர்களுக்கு உண்டாகுமா?

உனது இந்தக் கூட்டங்கள் மண்பாண்டங்களைக் கொண்டு விளையாடுகின்றன. நீ இந்த தேகபாண்டத்தைச் செய்கிறாய். அழிக்கிறாய். அவைகளை வைத்துக்கொண்டு உனது இந்த பூத கணங்கள் கூத்தடிக்கின்றன. இதனால் எனக்கென்ன லாபநஷ்டம். இது இன்று உடையட்டும் அல்லது நாளை உடையட்டும் எனக்கென்ன கவலை.

பிரளயம் என்றாவது தான் வரவேண்டுமென்பது என்ன. அது இன்றே வரட்டுமே. நான் மரணதேவனின் விளையாட்டுப் பொம்மை இல்லை. நான் மிருத்யுஞ்ஜயனின் சிரஞ்சீவிப் பிள்ளை. என்னைப் பார்த்துவிட்டு பயம் என்பது காதவழி ஓடவேண்டாமா?

அப்பா ப்ரளயரட்சா மகாகால, வருவாய் அப்பா. நான் உனது மகன். உன்னைக் கூவி அழைக்கிறேன். நீ வா. நீவரும் சமயம் நான் பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருப்பேனானால் அவைகளைப் பிடுங்கி தூர எறிந்து விடு. உனது கோடி கோடி பிரம்மாண்டங்களை தினம் தினம் தூளாக்கும் சரணங்களைக் காட்டியருள்.

மரணம் வாழ்வு இரண்டிலிருந்தும் விடுதலை வேண்டுமென்றால் ஊழிக்கூத்தனை அழை. மகா காலனை நினை. தேகப்பற்றுதலை அத்தேவன் ஒருவனாலேயே அழிக்க முடியும். தேகப்பற்றே ஆசைக்கு அடிவேர் என்பதை மறக்காமல் ஜய ஜய மிருத்யுஞ்ஜய வா! வா! வா! என்று கதறுங்கள்.

Registered at the G. P. O. as a Newspaper M. L 359/00.

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இந்தச் சோதியுடன் சோதி 28 ஆண்டுச் சேவையை ஆரம்பித்து 3-4ம் இதழ் வெளிவருகிறது. இன்றைய நிலையில் கடுதாசித் தட்டுப்பாடும் விலை ஏற்றமும் யாவரும் அறிந்ததே. எம்மால் இயன்றளவு ஆத்மீக சேவை செய்வதே எமது குறிக்கோள். ஆகவே சந்தா நேயர்கள் தங்கள் சந்தாக்களை வெகு விரைவில் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரியகாலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகம் பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்.

## ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி (இலங்கை.)

அச்சிடுவிப்போர்:— ஆத்மஜோதி நிலையம்
அச்சிடுவோர்:— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 14-2-76.